"இனிமையான குழந்தைகளே -- பாபாவிடம் அன்பு மற்றும் மதிப்பு வைத்தீர்கள் என்றால், பாபாவின் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கும், மாயையின் துரு இறங்கிக் கொண்டே இருக்கும்"

கேள்வி: இந்த உயிருள்ள தோட்டத்தில் நிறைய மலர்கள் மலர்வதே இல்லை, மொட்டு மொட்டாகவே இருந்து விடுகிறது -- ஏன்?

பதில்: ஏனென்றால் முயற்சியில் சோம்பேறித்தனம் இருக்கிறது, நினைவு செய்யும் நேரத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். உறங்குபவர்கள் தங்களுடைய நேரத்தை அப்படியே இழந்து விடுகிறார்கள். யார் அமிர்த வேளையில் உறங்குகிறார்களோ அவர்கள் அனைத்து பிராப்திகளை யும் இழந்து விடுகிறார்கள். மூடிய மொட்டுகளாகவே இருந்து விடுகின்றன. யார் தேவி-தேவதா தர்மத்தின் ஆல்ரவுண்டு நடிகர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் தான் எப்போதும் ரோஜா மலராக இருக்கிறார்கள்.

பாடல்: இந்த நேரம் சென்று கொண்டிருக்கிறது ....................

ஓம் சாந்தி. இதை யார் புரிய வைத்தது? எல்லைக்கப்பாற்பட்ட தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைத்தார். எல்லையற்ற கடிகாரத்தில் இப்போது மீதி கொஞ்ச நேரமே அல்லது சில நிமிடங்களே உள்ளன. மணிகள் சென்று விட்டன, மீதி சில நிமிடங்களே இருக்கின்றன. யார் நல்ல புத்திசாலி குழந்தைகளாக இருக்கின்றார்களோ, அவர்கள் தெரிந்துள்ளார்கள், வரிசைக்கிரமம் என்பது இருக்கிறது அல்லவா? ரோஜாப்பூ இருக்கின்றது அதிலும் கூட வரிசைக்கிரமம் இருக் கின்றது. இங்கேயும் கூட ரோஜா பூக்கள் இருக்கின்றன, ஆனால் அதில் சில பூக்கள் மூடிய மொட்டு களாகவும், சில பூக்கள் கொஞ்சமாக மலந்திருக்கின்றன. உங்களுடைய தேவி-தேவதா தர்மம் கூட எப்போதும் ரோஜா மலரைப் போன்றதாகும், எப்போதும் ஆல்ரவுண்டு நடிப்பை நடிக்கக் கூடியது. நீங்கள் அனைத்து தர்மங்களிலும் உயர்ந்ததிலும் உயர்ந்த தர்மத்தைச் சேர்ந்தவர்கள், எப்போதும் ரோஜா மலர்கள். மற்ற தர்மத்தைச் சேர்ந்தவர்கள் பிறகு வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள், சிலர் செண்பகப் பூவாகவும், சிலர் மல்லிகைப் பூவாகவும், சிலர் தும்பைப் பூவாகவும், சிலர் அரளிப் பூவாகவும் இருக்கிறார்கள். தோட்டம் இருக்கிறது அல்லவா? அனைத்து தர்மங்களின் தோட்ட மாகும். தேவி-தேவதா தர்மம் தான் உயர்ந்ததிலும் உயர்ந்தது, என்பதை குழந்தைகள் தெரிந்துள்ளார்கள். சீசன் இல்லாத போது சிறிய மொட்டு கூட இருப்பதில்லை, மொட்டு மலர் கூட இருப்பதில்லை. (பாபா இன்று தோட்டத்திலிருந்து ஒரு பெரிய ரோஜா மலர், ஒரு சிறிய மலர், ஒரு பாதியாக மலர்ந்த மலர், ஒரு மொட்டு, ஒரு மூடிய மொட்டு, ஒரு சிறிய மொட்டு ......... இப்படி வித விதமாகக் கொண்டு வந்து முன்னால் சிறிய மேஜையில் வைத்திருக்கிறார். இப்போது பாருங்கள், சிறிய மொட்டுகளில் கூட சில அரைகுறையாக உள்ளன, சில பாதியாக மலர்ந்திருக் கின்றன. சில மலராக இருக்கிறது, சில மூடிய மொட்டாக உள்ளன. சில மலர்கள் வாடி விடுகிறது, முழுவதுமாக மலர்வதில்லை. சரியாக அப்படித் தான் இருக்கிறது அல்லவா? ஆகையினால் பாபா கூறுகின்றார், முயற்சியில் சோம்பேறித் தனம் செய்யாதீர்கள். அப்படியே மொட்டு மொட்டாகவே இருந்து விடாதீர்கள். சிலர் பாதியாகவே இருந்து விடுகிறார்கள், வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். இந்த

நிலையில் இவர்கள் என்ன பதவி அடைவார்கள், என்பதை அரிய முடிகிறது. சமயம் மிகக் குறைவாகத் தான் இருக்கிறது. கடிகாரம் உருவாக்கப்பட்டிருக்கிறது, முட்களை மாற்ற முடியாது. அடையாளம் இருக்கும் அளவிற்கு யுக்தியோடு உருவாக்க வேண்டும். இங்கே இருந்து ஆரம்பித்து முட்கள் இப்போது இங்கு வரை வந்து சேர்ந்திருக்கிறது. பூஜ்ஜியத்தில் ஆரம்பித்து பிறகு முள் 12 வரை வந்து முடிகிறது. ஆக இந்த சக்கரத்தில் கூட முதலில் தேவி-தேவதா தர்மம் வந்தது, இப்போது இது கடைசியாகும். எப்போதிலிருந்து பாபா வந்தாரோ அப்போதிலிருந்து கணக்கிடப் படுகிறது.

ஆக பாபா கூறுகின்றார் -- குழந்தைகளே, நேரத்தை வீணாக்காதீர்கள். பாபாவை நினைவு செய்து கொண்டே இருங்கள். எந்தளவிற்கு நினைவு செய்வீர்களோ, அந்தளவிற்கு பாவ கர்மங்கள் வினாசம் ஆகும். அனைவரின் மூலமாகவும் விகர்மங்கள் நடந்து கொண்டு தான் இருக்கிறது. நம் மூலம் நடப்பதில்லை, என்று யாரும் நினைக்காதீர்கள். அந்தளவிற்கு அகங்காரம் யாரும் வைக்காதீர்கள். மிகவும் மறைமுகமாகக் கூட விகர்மங்கள் நடக்கிறது. பாவ கர்மங்களிலிருந்து மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இந்த நேரத்திலிருந்து உங்களுக்கு சமயத்தைப் பற்றித் தெரிந்து விடுகிறது. மனிதர்கள், கலியுகம் இன்னும் குழந்தையாக இருக்கிறது, என்பதை அரிந்திருக் கிறார்கள். முற்றிலும் காரிருளில் இருக்கிறார்கள். இப்போது நீங்கள் இறந்தவர்களை எழுப்ப வேண்டும். அதிகாலையில் எழுந்து பாபாவை நினைவு செய்ய வேண்டும். அமிர்த வேளையில் யார் உறங்கினார்களோ, அவர்கள் அனைத்து பிராப்தி களையும் இழந்தவர்களாவர். அதாவது நினைவு செய்வதற்கான நேரத்தை இழக்கக் கூடாது, இல்லை யென்றால் இறந்தவர்கள் இறந்தவர் களாகவே இருந்து விடுவர். சிலர் மொட்டுகளாகவே இருந்து விடுகின்றனர். புயலில் நல்ல-நல்ல மொட்டுகள் கூட விழுந்து விடுகின்றன. மலர்களும் விழுகின்றன, மொட்டுகளும் விழுகின்றன. பிறகு முட்கள் முட்களாகவே இருந்து விடுகின்றன. தேவதைகளின் வம்சத்தில் என்னவோ வருவார்கள், ஆனால் பிரஜையில் தான் வருவார்கள். நீங்கள் ரோஜா செடியைச் சேர்ந்தவர்கள். ஆனால் இதிலேயே மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. மனிதர்கள், இன்னார் சொர்க்கத்தை அடைந்தார், என்று பாடுகிறார்கள், ஆனால் என்ன பதவி அடைந்தார்? இதற்கு கூட காரணம் இருக்கும் அல்லவா? எந்தளவிற்கு பாபாவிற்கு மிகவும் சேவாதாரி குழந்தைகளாக இருப்பார்களோ, அந்தளவிற்கு மிகவும் அன்பான குழந்தைகளாகவும் இருப்பார்கள், என்பதை குழந்தைகள் புரிந்து கொள்ள முடியும். இது பொதுவான விசயமாகும். நல்ல, கட்டளைப்படி நடக்கக் கூடிய, நேர்மையான குழந்தைகள் தாய்-தந்தையருக்கு பிடித்தமானவர்களாக இருக்கிறார்கள். மாயை முற்றிலும் நேர்மை இல்லாதவர்களாக மாற்றி விடுகிறது. நம் மூலம் மிகப் பெரிய தவறு நடக்கிறது, என்பது கூடத் தெரிவதில்லை. யார் செய்வார்களோ, அவர்கள் அடையத் தான் வேண்டும் என்று பாபா கூறுகின்றார். தண்டனை அனுபவிக்கும் அளவிற்கான பாவ கர்மங்கள் செய்யக் கூடாது. சிலர் பாவ கர்மங்களுக்கான தண்டனையை இங்கே கூட அடைந்து விடுகிறார் கள். கர்மச் சுமையாகும். கர்ப சிறையில் கூட கர்மச்சுமையாகும். அதிலிருந்து மிகவும் எச்சரிக்கை யாக விடுபட வேண்டும், மாயை மிகப்பெரிய சைத்தானாக இருக்கிறது, ஆகையினால் மிகவும் அன்பான பாபாவை ஒவ்வொரு சமயமும் நினைவு செய்து கொண்டே இருக்க வேண்டும். எப்படி லௌகீக தந்தை தன்னுடைய குழந்தைகளைத் தெரிந்திருக்கிறாரோ,

அதுபோல் பரலௌகீக தந்தை கூட ஒவ்வொரு குழந்தையையும் தெரிந்திருக்கிறார். நான் ஒரேயொரு இந்த உடலில் தான் வருகின்றேன், என்று பாபா அவரைக் கூறுகின்றார். எவ்வளவு அதிகமான குழந்தைகள் இருக்கின்றார்கள். இன்னும் நிறைய பேர் வருவார்கள். மரம் வளருகிறது. பகவானுக்கு முன்னால் பக்தர்களின் கூட்டம் இருக்கும். சிவனுடைய கோவிலில் அவ்வளவு கூட்டம் இருப்ப தில்லை. இங்கே எவ்வளவு கூட்டம் இருக்கும், என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். சூரியவம்ச, சந்திரவம்ச இராஜ்ஜியம் ஸ்தாபனை ஆக வேண்டும். இந்த விஷயங்களில் மிகவும் பரந்த புத்தி வேண்டும். உண்மையில் இவ்வளவு பக்தி செய்யும் பக்தர்களுக்கு முன்னால் பகவான் வந்தால் எவ்வளவு கூட்டம் இருக்கும்.

பாபா நமக்கு இராஜயோகம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார், என்பதைத் தெரிந்துள்ளீர்கள், இருந்தாலும் வீட்டில் இருந்து கொண்டே மறந்து விடுகிறீர்கள். இது அப்படியொரு விசித்திரமான விஷயமாக இருக்கிறது, உடன் இருந்து கொண்டே கூட மறந்து விடுகிறீர்கள். அந்தளவிற்கு அன்பு மரியாதை இருப்பதில்லை. ஊசியில் துரு ஏறியிருந்தால் அது காந்தத்தைக் கவர முடியாது. யோகம் மற்றும் ஞானமும் இருந்தால் தான் துரு நீங்க முடியும். மேலும் பரமாத்மாவின் ஆசீர்வாதமும் வேண்டும் அல்லவா? மாயையின் துரு ஏற்பட்டிருக்கிறது, எந்த பொருளிலாவது துரு பிடித்திருந்தால் குப்பையில் போடுகிறார்கள். உங்களுக்கு கூட யோகத்தின் மூலம் துரு நீங்குகிறது. ஆத்மா தூய்மையாகி விடுகிறது. குழந்தைகளே, மலர்களாக ஆகிக் காட்டுங்கள், என்று பாபா புரிய வைக்கின்றார். நீங்கள் யாருக்கு முன்னால் அமருகின்றீர் களோ, அவர்களுக்கு உடனே காட்சிகள் ஏற்படும் அந்த சமயம் கூட சீக்கிரம் வரும். பிரம்மா விஷ்ணுவின் காட்சி நிறைய பேருக்கு ஏற்படுகிறது. வழிகாட்டுகின்றது -- பிரம்மா குமார-குமாரிகளிடம் செல்லுங்கள். பிரம்மாவும் அமர்ந்திருக்கிறார், பிரம்மா குமார-குமாரிகளும் கூட அமர்ந்திருக்கிறார்கள். இன்னும் போகப்போக நிறைய பேர்களுக்கு காட்சிகள் ஏற்படும். பாபா காட்சிகள் செய்விக்கின்றார், நீங்கள் அங்கே செல்லுங்கள், நான் அங்கே இராஜயோகம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன், இதன் மூலம் நீங்கள் இந்த பதவியை அடைய முடியும். அது கூட ஒரு வினாடியின் விஷயமாகும். மன்மனாபவ. என்னை நினைவு செய்தீர்கள் என்றால், நீங்கள் சூரிய வம்சத்தவர்களாக ஆகி விடுவீர்கள். அங்கே தேவதை வம்சத்தவர்கள், மேலும் இங்கே அசுர வம்சத்தவர்கள். எவ்வளவு நல்ல விதத்தில் புரிய வைக்கப்படுகிறது. சில பொருட் களை மிருதுவாக்க அடிக்கப்படுகிறது அல்லவா. கட்டிடத்தின் அஸ்திவாரத்தை உறுதியாக்கு வதற்கு எவ்வளவு உழைக்கிறார்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு என்னை நினைவு செய்யுங்கள், என்று பாபாவும் கூறுகின்றார். சிவபுரி மற்றும் விஷ்ணுபுரியை நினைவு செய்யுங் கள். இதை உள்ளுக்குள் தனக்குத் தானே பேச வேண்டும். முதலில் தனக்குள் சிந்தனை செய்து பிறகு பேச வேண்டியுள்ளது -- புரிய வைப்பதற்காக. நீங்களும் கூட புரிய வைக்க வேண்டும். இப்போது குழந்தைகள் கண்காட்சியில் எவ்வளவு உழைக்கிறார்கள். அனைத்தும் புரிய வைப்பதற்கான விஷயமாகும். வெறும் சுலோகத்தினால் மட்டும் யாரும் புரிந்து கொள்ள முடியாது. தேவி-தேவதைகளுக்கு எப்படி இராஜ்ஜியம் கிடைத்தது, என்று பாபா வந்து புரிய வைக் கின்றார். யார் இராஜ்யோகம் கற்றுக் கொடுத்தது? பகவானுடைய மகாவாக்கியம் -- நான் இராஜயோகம் கற்றுக் கொடுக்கின்றேன், என்னை நினைவு செய்யுங்கள், என்று கூறுகின்றேன். சிவபுரி மற்றும்

விஷ்ணுபுரியை நினைவு செய்யுங்கள். கண்காட்சியில் கூட குழந்தைகள் நல்ல விதத்தில் புரிய வைக்க வேண்டும். தியானத்தைப் பற்றியும் புரிய வைக்க வேண்டும். நாங்களும் கூட தியானம் செய்கின்றோம். நடக்கும்போது-போகும் போதும் வரும்போதும் பாபாவை நினைவு செய்து கொண்டே, பாபாவிடம் பேசிக்கொண்டே இருக்கின்றோம். எப்படி ஏதாவது நிகழ்ச்சிக்காக எங்காவது செல்ல வேண்டும் என்றால், இன்று இன்னாரிடம் நாம் செல்ல வேண்டும் என்பது புத்தியில் இருக்கிறது அல்லவா? நிகழ்ச்சி கிடைத்தது புத்தி ஓடிக்கொண்டிருக்கிறது. நேரம் நெருங்கி வரும், இப்போது நாம் செல்ல வேண்டும், என்று புரிந்து கொள்வீர்கள். உங்களுக்கு கூட உள்ளே இது இருக்க வேண்டும்-- அவ்வளவுத் தான்!, இப்போது நாம் பாபாவிடம் செல்ல வேண்டும். இந்த பழைய சரீரத்தை விட வேண்டும். சிவபுரிக்குச் செல்ல வேண்டும். இந்த இராவணபுரியை விட வேண்டும். இது மிகவும் மோசமான அழுக்கான உலகமாகும். இப்போது நாம் சங்கமயுகத்தில் அமர்ந்திருக்கின்றோம். இது கலியுக சரீரமாகும். என்னை நினைவு செய்து கொண்டே இருந்தீர் கள் என்றால், ஆத்மாக்களாகிய உங்களை சிவபுரிக்கு அழைத்துச் செல்வேன், என்று பாபா கூறு கின்றார். கிருஷ்ணர் அழைத்துச் செல்ல மாட்டார். ஆக இது புரிய வைக்க வேண்டிய விஷய மாகும்.

சிவதந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள், என்று இப்போது பாபா கூறுகின்றார். இப்போது நீங்கள் இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சிவபுரிக்கு வரவேண்டும், பிறகு விஷ்ணுபுரிக்கு சென்று விடுவீர்கள். இதைப் புரிய வைப்பது சகஜமல்லவா? சிவபுரி முக்தி அடைந்து விஷ்ணுபுரி (ஜீவன்முக்தி) செல்ல வேண்டும். அனைவருக்கும் தந்தை ஒருவரே. முக்கியமாக இதைப் புரிய வைக்க வேண்டும். மற்றபடி எந்தளவிற்கு சுலோகன் போன்றவைகள் உருவாக்குகிறீர்களோ, அவ்வளவு அதிகம் செலவாகிறது. படங்கள் அனைத்தும் உங்களிடத்தில் இருக்கின்றன. கராச்சியில் உங்களிடம் எவ்வளவு பேர் வந்தார்கள். பெரிய மைதானத்தில் மேஜை-நாற்காலிகள் போடப்பட்டிருந்தது. யார் வந்தார்களோ, அவர்களுக்கு அமர்ந்து புரிய வைக்கப் பட்டது. முன்பு அவ்வளவு ஞானம் இல்லை. இப்போதோ முற்றிலும் சகஜ ஞானம் கிடைத்திருக் கிறது. பாபாவையும் தெரிந்துள்ளீர்கள். பாபா சொர்க்கத்தை படைப்பவராவார். என்னை மற்றும் ஆஸ்தியை நினைவு செய்யுங்கள், என்பது அவருடைய கட்டளையாகும். படத்தைக் காட்டி இதைப் பற்றி புரிய வையுங்கள். முன்பெல்லாம் புரிய வைப்பதின் மூலம் கேட்டு-கேட்டு தியானத்தில் (பழ்ஹய்ள்) சென்று விட்டார்கள். அந்த சமயத்தில் நீங்கள் சிறிய மொட்டுகளாக இருந்தீர்கள். பாபாவிடம் அனைத்து அற்புதங்களும் இருந்தது. கயிற்றை (தன்வசம்) இழுத்து கொண்டார். இப்போதோ புரிய வைப்பதற்கான அவசியம் இருக்கிறது. இன்றைக்கு மனிதர்கள் கூட மிகவும் கெட்டுப்போய் இருக்கிறார்கள். படிவத்தை நிரப்பாமல் அவர்களது தொழிலைத் தெரிந்து கொள்ள முடியாது. வக்கீல் போன்ற படிப்புகளை படிப்பிப்பதற்கான டீச்சர்கள் இருப்பதைப் போலாகும். இவர் எல்லையற்ற தந்தை எவ்வளவு பெரிய டீச்சராக இருக்கிறார். அந்த டீச்சர் அதிகபட்சம் வக்கீலாக்குவார். இடையில் சரீரத்தை விட்டு விட்டால் வக்கீலுக்கான படிப்பும் முடிந்தது. அப்படியே அடுத்த பிறவிக்கு செல்வாரா என்ன? இங்கே நீங்கள் என்னவெல்லாம் செய்கிறீர்களோ, அவற்றை நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்கிறீர்கள். ஆத்மாவில் சம்ஸ்காரம் இருக்கிறது. சிறிய குழந்தைகளின் உறுப்புகள் (ஞ்ழ்ஞ்ஹய்ள்) சிறியதாக

இருக்கின்ற காரணத்தினால் பேச முடிவதில்லை. கர்மேந்திரியங்களின் மூலம் எதுவும் செய்ய முடியாது ஆனால் சம்ஸ்காரத்தை எடுத்துச் செல்கிறார்கள் அல்லவா? இது அழிவற்ற ஞானமாகும், பெரியவர்களாகி பிறகு வந்து ஞானத்தை எடுத்துக் கொள்வர். ஆத்மா கண்டிப்பாக மீண்டும் வரும். எங்கேயாவது யாருக்காவது நன்மை செய்யும். தன்னுடைய தாய்-தந்தையரைக் கூட இந்த பக்கம் இழுக்கும். சிறிய குழந்தை யாக இருக்கும் ஆனாலும் கூட மம்மா-பாபாவைப் பார்த்தவுடன் அவர்களுக்கு அன்பின் கவர்ச்சி ஏற்படும். உறுப்புகள் சிறியதாக இருக்கின்ற காரணத்தினால் பேச முடியாது. ஆனால் தன் இனத்தைச் சேர்ந்தவர்களின் பக்கம் அன்பு செல்லும்.

ஆக இந்த ஞானம் மிகவும் விசித்திரமானது, ரமணீகரமானது மற்றும் எளிமையானதாகும். சிலரோ முற்றிலும் அப்படியே முட்களாகவே இருந்து விடுகிறார்கள். சத்யுகம் என்பது ரோஜா மரமாகும். இப்போதோ முட்களாக இருக்கிறது. பிறகு அதிலிருந்து சில சிறிய மொட்டுகள் வந்து கொண்டிருக்கின்றன. எப்போதும் ரோஜாவாக என்னவோ இருக்கிறது இருந்தாலும் அதிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. பிரஜையிலும் கூட வருவார்கள் அல்லவா? மொட்டாகிப் பிறகு வாடிப்போய் முடிந்து விடுவார்கள், இது படிப்பாகுமா என்ன.? சிறிய மொட்டு மூடியது மூடியபடி இருந்தால் பிரஜையில் சென்று விடுவார்கள். யார் மலராக ஆகிறார்களோ, அவர்கள் இராஜ்யத்தில் வருவார்கள். பாபா தோட்டத்திற்குச் செல்லும்போது குழந்தைகளுக்குப் புரிய வைப்பதற்காக மலர்களையும் கொண்டு வருகின்றார். இப்போது முயற்சி செய்து மலராக ஆகவில்லை என்றால், பிறகு மிகவும் பச்சாதாபப்பட வேண்டியிருக்கும். ஏற்கனவே விகர்மங்களின் சுமை தலையில் இருக்கிறது. பிறகு இன்னும் தண்டனை அனுபவித்து பிரஜை பதவி அடைவது, இது எதற்கு உதவும்? நம்முடைய தெய்வீக இராஜ்ஜியம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது, என்பதை என்னவோ புரிந்துள்ளீர்கள். யார்-யார் என்னென்ன ஆவார்கள்? என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள முடியும். இவர் எந்தளவிற்கு படித்துக் கொண்டிருக்கிறார், என்னவாக ஆவார், என்பது மனதில் இருக்கும். இன்னும் போகப்போக உங்களுக்கு நிறைய காட்சிகள் ஏற்படும். படிக்காத வர்கள் நிறைய பச்சாதாபப்படுவார்கள். நேரம் மிகக் குறைவாக இருக்கிறது. பிறகு இவ்வளவு வேகமாக ஓடி கூட எப்படி சரி செய்ய முடியும்? பாபா கூறுகின்றார், குழந்தைகளாக ஆகிவிட்டு பிறகு ஒருவேளை விகர்மங்கள் செய்தால் நூறு மடங்கு தண்டனை அனுபவிக்க வேண்டி வரும். ஜெயிலுக்கு செல்லக்கூடிய நிறைய திருடர்களுடைய வேலை இப்படித்தானிருக்கும். -- தண்டனை அனுபவிப்பது, ஜெயிலுக்குச் செல்வது. இப்போது நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த மகாராஜா-மகாராணி சூரிய வம்சத்தவர்களாக ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். வரிசைக் கிரமம் என்பது இருக்கிறது அல்லவா? யார் வெளியே சென்று விடுவார்களோ, அவர்களின் நிலை என்ன ஆகும்! பாபா எவ்வளவு நல்ல விதத்தில் புரிய வைக்கின்றார், ஆனால் அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் புரிந்து கொள்வதே இல்லை பிறகு முயற்சி செய்விக்கக் கூடியவர் என்ன செய்ய முடியும்? பாபா என்னவோ மலராகுங்கள், பாபாவை மறக்காதீர்கள், என்று தான் கூறுகின்றார். அப்படிப்பட்ட தந்தையின் கையை ஒருபோதும் விடக் கூடாது. மாயை மலைப்பாம்பு பச்சையாகச் சாப்பிட்டு விடும். தன்னுடைய இராஜ்ஜிய-பாக்கியத்தை இழந்து விட்டு அமரும்படி யான தவறைச் செய்யக் கூடாது. பிறகு கல்ப-கல்பத்திற்கும்

இப்போது பார்க்கும் நடத்தையைப் போலவே பார்க்க வேண்டியிருக்கும். சிலருக்கு சதோபிரதான நடத்தை இருக்கிறது, சிலருக்கு ரஜோ, சிலருக்கு தமோ................ சில நல்ல-நல்ல குழந்தைகள் மீது மிகக் கடுமையான கிரகச்சாரம் பிடித்துக் கொள்கிறது. உள்ளே கருப்பாகவும், வெளியே நன்றாகவும் இருக்கிறார்கள். தவறுகள் ஏற்பட்டால் ஆத்மா கருப்பாக ஆகிவிடும். நிழல் கருப்பாக விழுகிறது. ஆகையினால் தான் பாபா கூறுகின்றார், ஒரு காதின் மூலம் கேட்டு மற்றொரு காதின் வழியாக வெளியேற்றி விடுங்கள், கெட்ட விஷயங்களுக்கு காதை மூடிக் கொள்ளுங்கள். நல்லது!

''இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு-நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்''

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) எப்போதும் விக்கர்மங்களை வினாசம் செய்வதற்கான ஈடுபாட்டில் இருக்க வேண்டும். எந்தவொரு விகர்மமும் ஏற்படாத அளவிற்கு பாதுகாப்பு செய்ய வேண்டும்.

(2) மாயையின் கிரகச்சாரத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு கெட்ட விஷயங்களுக்கு காதுகளை மூடிக்கொள்ள வேண்டும். தன்னுடைய நடத்தையை சதோபிரதானமாக்க வேண்டும். உள்ளேயும் வெளியேயும் சுத்தமாக இருக்க வேண்டும்.

வரதானம்: சமநிலை மூலமாக ஆனந்தமான வாழ்வை சாட்சாத்காரம் செய்விப்பவராகி அனைவரது ஆசீர்வாதத்திற்கும் பாத்திரமாகுக

சம நிலை என்பது பெரிய கலை. நினைவும் சேவையும் சமநிலையில் இருந்தால் தந்தையின் ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டேயிருக்கும். ஒவ்வொரு விசயத்தின் சமநிலையால் சுலபமாகவே நம்பர் ஒன் ஆகிவிடலாம். சமநிலையே அனேக ஆத்மாக்களுக்கு முன்னால் ஆனந்த வாழ்வினை சாட்சாத்காரம் செய்விக்கும். சமநிலையை எப்போதும் நினைவில் வைத்து, அனைத்து பிராப்தி களையும் அனுபவம் செய்து கொண்டிருந்தால் தானும் முன்னேறி அனேக ஆத்மாக்களையும் முன்னேறச் செய்வீர்கள்.

சுலோகன்: மகாவீர் என்பவர் கடினமான ஒவ்வொன்றையம் சுபலமாக்கி, மலையை கடுகாக்கி அதனையும் இலவம் பஞ்சாக்கி விடுவார்.